# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை
உடனுக்குடன் தெரிந்து
கொள்ள
www.supeedsam.com

வியாழக்கிழமை 31.10.2024 supeedsam.com supeedsam@gmail.com







# தேர்தல் காலத்தில் பெரிய நீலாவணையில் ஒரு வேட்பாளர் றோட் போடுகிறார்!

## தேர்தல் கட்டளைச் சட்டம் இதற்கு அனுமதிக்கிறதா? கல்முனையில் சங்கு வேட்பாளர் புஷ்பராஜா கேள்வி






( வி.ரி.சகாதேவராஜா)

இலங்கை தமிழரசுக் கட்சி வேட்பாளர் இந்துனேஸ் பெரிய நீலாவணையில் கடந்த வாரம் வீதி அமைத்துள்ளார். தேர்தல் கட்டளைச் சட்டத்தின் படி இப்படி செய்யலாமா? இதற்கு தேர்தல் சட்டம் அனுமதிக்கிறதா?

இவ்வாறு ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் வேட்பாளரும் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் முன்னாள்

02 ஆம் பக்கத்தில்...

# தமிழ் பிரதிநிதித்துவத்தை பாதுகாக்கவே

## த.தே.கூட்டமைப்பாக இங்கு இணைந்து போட்டியிடுகிறோம்

(ஹஸ்பர் ஏ.எச்)

தமிழ் பிரதிநிதித்துவத்தை பாதுகாக்கவே தமிழ் தேசிய கூட்டமைப்பாக இங்கு இணைந்து போட்டியிடுகிறோம் என இலங்கை தமிழ் அரசு கட்சியின் முதன்மை வேட்பாளரும் முன்னால் பாராளுமன்ற உறுப்பினருமான சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.

திருகோணமலை தம்பலகாமம் பகுதியில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் தெரிவிக்கையில் வடகிழக்கு மாகாணங்களில் மற்ற இடங்களில் இவ்வாறின்றி திருகோணமலை மாவட்டத்தில் இலங்கை தமிழ் அரசு கட்சி டெலோ புளட் என இணைந்து போட்டியிடுகிறோம் இதன் மூலம் மக்கள் மத்தியில் வாக்களிப்பு வீதத்தை

02 ஆம் பக்கத்தில்...












# வீட்டுச் சின்னத்தை வீணடிப்பதற்கு வேற்றுச் சின்னமா?

## ஒருபோதும் முடியாது! வீடே வெல்லும்!!

### வீரச்சோலையில் வேட்பாளர் ஜேயசிறில் சூளுரை



( வி.ரி.சகாதேவராஜா)

வீட்டுச்சின்னத்தை வீணடிப்பதற்கு பல வேற்றுச் சின்னங்கள் தலைப்பட்டிருக்கின்றன. எத்தனை சின்னங்கள் வந்தாலும் வீடே வெல்லும்.

இவ்வாறு நாவிதன்வெளி வீரச்சோலை மக்கள் அளித்த வரவேற்பு நிகழ்வில் உரையாற்றிய இலங்கை தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட வேட்பாளர் முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் சூளுரைத்தார்.

வீரச்சோலை ஆலய முன்னாள் தலைவர்

02 ஆம் பக்கத்தில்...







# வெடி குண்டு மிரட்டல்களுடன் அடிக்கடி தரையிறங்கும் இந்திய விமானங்கள்

இலங்கையின் பாதுகாப்பை பலப்படுத்துவது மற்றும் தொடர்ச்சியாக இலங்கையின் பாதுகாப்புக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல்கள் குறித்து தேசிய பாதுகாப்பு சபையில் தீவிர அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய பாதுகாப்புச் சபை கூட்டம் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

இந்தக் கூட்டத்தில் முப்படை பிரதானிகள், அரச பாதுகாப்புத் துறையின் உயர்மட்ட அதிகாரிகள், துறைசார் அரச அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டுள்ளனர்.

இதன்போது, அறுகம்பே விவகாரம் குறித்து அவதானம் செலுத்தப்பட்டதுடன், குறித்த புலனாய்வு தகவல் கிடைக்கப்பெற்றன் பின்னர் நாட்டில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்ட விதம் மற்றும் எதிர்கால பாதுகாப்புத் திட்டங்கள் குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக அரச தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேபோன்று தொடர்ந்து இலங்கைக்கு வரும் சில அச்சுறுத்தலான தகவல்கள் குறித்து எதிர்காலத்தில் நாட்டின் பாதுகாப்பை பொது மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு பாதிப்பின்றி பலப்படுத்துவதற்கான பொறிமுறைகள் குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, வெடி குண்டு மிரட்டல்கள் விடுக்கப்பட்டு தொடர்ச்சியாக கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தரையிறக்கப்படும் இந்திய விமானங்கள் குறித்தும் இதன்போது அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக இவ்வாறு விடுக்கப்படும் வெடி குண்டு மிரட்டல்கள் இலங்கையின் சுற்றுலாத்துறையில் ஏற்படுத்தக்கூடிய தாக்கம் குறித்து ஆழமாக விவாதிக்கப்பட்டுள்ளது.

தொடரும் அச்சுறுத்தல்கள் நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளை பாதிக்கக்கூடும் என்றும், இது சுற்றுலாத் துறையின் எதிர்காலம் குறித்த கவலையை எழுப்புவதாகவும் அதிகாரிகளால் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு இதன்போது விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

விமானம் இலங்கை வான் எல்லைக்குள் நுழைந்த சிறிது நேரத்திலேயே வெடிகுண்டு மிரட்டல்கள் விடுக்கப்படுவது குறித்து பாதுகாப்பு தரப்பினர் ஜனாதிபதிக்கு விளக்கமளித்துள்ளனர். இந்திய வான் பரப்புக்கு அருகிலுள்ள விமான நிலையமாக கட்டுநாயக்க விமான நிலையம் அமைந்துள்ளதால், மிரட்டல்கள் விடுக்கப்படும் அனைத்து விமானங்களும் பாதுகாப்பு சோதனைக்காக இங்கு திருப்பி விடப்படுகின்றன.

அண்மையில் எவ்வாறு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டு தரையிறக்கப்பட்ட மூன்று விமானங்கள் குறித்தும் பாதுகாப்புச்சபைக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

கடந்த 19, 24 திகதிகளில் இந்தியாவின் மும்பையிலிருந்து பயணத்தை ஆரம்பித்த இரண்டு விஸ்தாரா எர்லைன்ஸ் விமானங்கள் வெடி குண்டு மிரட்டல் காரணமாக இவ்வாறு அவசரமாக கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டிருந்தன.

அதேபோன்று கடந்த 28ஆம் திகதி இந்தியன் எயார்லைன்ஸுக்கு சொந்தமான அஐ-281 என்ற விமானமும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வீட்டுச் சின்னத்தை வீணடிப்பதற்கு வேற்றுச் சின்னமா?

முருகேசபிள்ளை சோமசுந்தரம் தலைமையில் ஆலய குருக்களின் முன்னிலையில் இவ் வரவேற்பு நிகழ்வு இடம்பெற்றது.

மேலும் அங்கு அவர் உரையாற்றிய போது.

எமக்காக நான், எனக்காக நான் இல்லை. இனத்துக்காகவே செயல்படுகின்றேன் ,எனது வெற்றி உங்களது வெற்றி. அம்பாறை மாவட்டம் மறுமலர்ச்சி பெற வாக்களியுங்கள். உங்களைப் பாதுகாப்பது உங்களுடைய வாக்குப்பலமே. எங்களுடைய ஆயுதம் உங்களுடைய வாக்கு. கூடிய வாக்குகள் கிடைக்கப் பெறுகின்ற போது அம்பாரை மாவட்டத்திற்கு சவாலாகதிகழ்கின்ற விடயங்களை சவாலாக எதிர்கொண்டு அனைத்து விடயங்களிலும் வெல்ல முடியும்.

வீரச்சோலை போன்ற பின்தங்கிய பிரதேசங்களை எழுச்சி பாதைக்கு கொண்டுவர முடியும் .அவ்விருத்தியுடன் கூடிய உரிமையையும் பெற்று தருவேன் என்றார்.

ஆலய முன்னாள் தலைவர் முருகேசபிள்ளை சோமசுந்தரம் பேசுகையில்..

இலங்கை தமிழரசுக் கட்சியினுடைய வெற்றி வேட்பாளர் ஜெயசிறிலை ஆதரித்து இங்கு ஆலயத்தில் நடைபெறும் கலந்துரையாடல் நிச்சயமாக அவர் வெற்றி பெறுவார் என்பதை கட்டியம் கூறுகிறது.

அம்பாறை மாவட்டத்திற்கு காவலனாக வர இருக்கின்ற பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை பெறக்கூடிய எமது ஏழைகளின் தோழன் அம்பாறை மாவட்ட மண்ணின் மைந்தன் ஜெயசிறில் அவர்களை நாங்கள் பெருமளவான வாக்குகளைச் செலுத்தி வெல்ல வைப்போம் . வீரச்சோலைக்கு அவர் தேர்தலைப் பிரச்சாரத்திற்கு மாத்திரம் வருபவர் அல்ல . ஏனைய ஆன்மீக சமூகப் பணிக்கும் கல்விக்கும் பல உதவிகளை கடந்த காலங்களில் செய்தவர். கொரோனா காலகட்டத்தில் உதவிய ஒரே மனிதர் இவர் தான். அவருக்கு பாராளுமன்ற பிரதிநிதித்துவம் கிடைக்க வேண்டும். அதற்காக நாங்கள் எங்களது கிராமம் முற்று முழுதாக ஒத்துழைத்து அவரை வெற்றி வாகை சூடுவதற்கு செயல்படுவோம்.என்றார். மேலும் மக்களுக்கு தனது ஆலோசனையையும் வழிகாட்டுதலையும் கூறி இருந்தார்.

ஆதரவாளர்கள் பொதுமக்கள் நலம்பிரும்பிகள் என பலரும் கலந்து கொண்டார்கள் .

## தமிழ் பிரதிநிதித்துவத்தை பாதுகாக்கவே

அதிகரிக்க பல விழிப்புணர்வுகளையும் மேற்கொண்டு வருகிறோம். தமிழ் மக்களின் உரிமைகளை பாதுகாக்க அதிகாரம் தேவை இலங்கை தமிழ் அரசு கட்சி இந்த உரிமைகளுக்காக பல போராட்டங்களை எழுபது வருடங்களாக போராடி வருகிறது தந்தை செல்வா தமிழர்களின் பாரம்பரியம் கலாசார பண்பாடுகளை பாதுகாக்க இக் கட்சியை உருவாக்கினார் அந்தளவுக்கு தமிழ் தேசியத்தை பாதுகாக்கவே தமிழ் அரசு கட்சி தோற்றம் பெற்றது .அதிகளவான வாக்குகளை அளிப்பதன் மூலம் எமது பிரதிநிதித்துவத்தை பாதுகாக்க வேண்டும் அண்ணளவாக ஐம்பதாயிரம் பேர்கள் வாக்குகளை மக்கள் வழங்க வேண்டும் .பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை இழந்தால் மக்களது உரிமைகள் பாதிக்கப்படும்.தமிழ் மக்களின் உரிமைகளை நிலை நாட்டவும் இருப்பையும் பாதுகாக்க தமிழ் பிரதிநிதித்துவம் தேவை என்றார்.

## தேர்தல் காலத்தில் பெரிய நீலாவணையில்

நாவிதன்வெளி தவிசாளருமான சோமசுந்தரம் புஸ்பராஜா கேள்வி எழுப்பினார் .

அம்பாறை மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் மற்றும் மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளரின் கவனத்திற்கு இதனைச் சமர்ப்பிக்கிறேன்.நடவடிக்கை எடுப்பார்களா? என்று கேட்டார்.

கல்முனை உடையார் வீதியில் அவரது தேர்தல் பிரச்சார அலுவலகத்தை திறந்து வைத்து உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ் அலுவலக திறப்பு விழா இடம் பெற்றது.

முன்னதாக அவருடன் மற்றும் ஒரு வேட்பாளர் கிருஸ்ணபிள்ளை லிங்கேஸ்வரன் ஈரோஸ் தலைவர் இரா.இராஜேந்திரா புளொட் மாவட்ட இணைப்பாளர் சங்கரி ஈபிஆர்எல்எவ் மாவட்ட இணைப்பாளர் புண்ணியநாதன் உள்ளிட்ட கட்சி பிரமுகர்கள் பட்டாசு வெடகளுக்கு மத்தியில் மாலை சூட்டி உடையார் வீதிச் சந்தியில் இருந்து ஊர்வலமாக அழைத்துவரப்பட்டார்கள் .

பின்பு

பிரச்சார அலுவலகம் திறந்து வைக்கப்பட்டதைத் தொடர்ந்து மக்கள் சங்கமித்த பொதுக் கூட்டம் நடைபெற்றது .

அங்கு அவர் மேலும் பேசுகையில் ..

பொத்துவில் வீதியில் கல்குவாரி வைத்து ஏழை மக்களின் உழைப்பை சாறாகப் பிழிந்து கோடி கோடியாக கறுப்பு பணம் சேர்த்தவர் அவர்.

அங்குள்ள மக்கள் 20 வருடங்களில் சுவாசக் கோளாற்றால் பாதிக்கப்பட்டு 40 வருடத்தில் சாகக்கூடிய நிலைமையில் இருக்கின்றார்கள்.

இன்று தேர்தல் என்றவுடன் பெரிய நீலாவணையில் வந்து றோட்டு போடுகிறார் சில இடங்களில் சாராயம் கொடுக்கிறார் காசு கொடுக்கிறார். இது தேர்தல் சட்டத்தின் படி முடியுமா?

அந்த வீதிக்கு பொறுப்பான அரச திணைக்களங்கள் அல்லது உள்ளூராட்சி சபை அதற்கு அனுமதி கொடுத்ததா? என்று கேட்கிறேன்.

அதுமட்டுமின்றி கோடி கோடியாய் வைத்திருக்கும் கோடீஸ்வரன் இதே பாணியில் மக்களுக்கு லஞ்சம் கொடுக்கிறார்.

அவர் நினைத்திருந்தால் ஐந்து ஏக்கர் காணியை எடுத்து சூரிய மின்கலத்தை பொருத்தி வரும் வருவாயில் ஏழைமக்களுக்கு உதவி இருக்கலாம் .

சுனாமி மற்றும் கொரோனா காலகட்டத்தில் ஒரு சோற்றுப் பார்சல் கூட ஏழைகளுக்கு கொடுக்காதவர்கள் இவர்கள் . இன்று தேர்தல் என்றஉடன் லஞ்சம் கொடுக்க வருகின்றார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு கல்முனையில் போஸ்டர் ஒட்டி இருக்கிறீர்கள். இது அழகா? பழம்பெரும் கட்சி தாய்க் கட்சி என்று ஒற்றுமையைச் சீர்குலைத்த இலங்கைத் தமிழரசுக் கட்சியில் இப்படிப்பட்ட கறுப்பு பண வேட்பாளர்களை நிறுத்தி இருக்கின்றீர்களே! வெட்கம் இல்லையா? இவர்கள் தமிழ் மக்களின் வாக்குகளை பிரித்து பிரதிநிதித்துவத்தை இழக்க இருக்கின்றார்கள். கடந்த 65 வருட காலமாக இலங்கை தமிழரசுக் கட்சி கல்முனை மக்களுக்கு பாரிய துரோகத்தை இழைத்தது வந்ததை நாங்கள் மறந்து விட முடியாது .இன்னுமா அவர்களை நம்புவது?

ஊடகங்களே விழித்தெழுங்கள்.

அன்று நாங்கள் உயிரைத்துச்சம் என மதித்து தமிழ் மக்களுக்காக போராடினோம். கஷ்டப்பட்டோம் சிறையில் அடைபட்டோம் .

ஏன் வட்டமடுவில் 30 ஆயிரம் மாடுகளையும் நான்காயிரம் மேய்ச்சல் தரைக்காணியையும் மீட்டெடுத்தோம்.

அப்பொழுது இவர்கள்கள் எங்கு போனார்கள்? இன்று அந்த 269 குடும்பங்களும் என்னோடு கூட நன்றியோடு இருக்கிறார்கள் .நான் வேண்டாம் என்றாலும் லட்சம் தருகிறார்கள். கடவுளை நாங்கள் காணவில்லை கடவுள் வடிவில் உங்களைத்தான் கண்டு இருக்கின்றோம் என்று கூறுகின்றார்கள்.

உங்களால்தான் எங்களது வாழ்வாதாரம் கிடைத்தது . உங்கள் தேர்தல் காலத்தில் எங்களது உதவியைச் செய்வோம் என்கிறார்கள். இவ்வாறுதான் மக்கள் நன்றியுடன்இருக்க வேண்டும்.

மக்களின் உழைப்பை உறிஞ்சி சேர்த்த கோடிகளை இன்று ஓடோடி வந்து வீதி போடுகிறார்கள். ஏன் இந்த வீதியை கடந்த காலத்தில் போட்டிருக்கலாமே?

தமிழரசு கட்சி இப்படிப்பட்டவர்களை அனுமதிக்கிறதா?

எனவே தான் சொல்கிறோம் மாற்றம் மாற்றம் என்று பேசித் திரிவதால் மாற்றம் வராது. மாற்றும் ஒன்று தேவை என்றால் முதலில் நாங்கள் மாற வேண்டும். அமெரிக்கா ஜனாதிபதி ஒபாமாவும் அதைத்தான் சொல்லுகிறார் .

எனவே அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் எதிர்காலத்தில் நிம்மதியாக அபிவிருத்தியோடு வாழ வேண்டுமாக இருந்தால் நீங்கள் சங்கை ஆதரியுங்கள். கடந்த காலங்களில் இலங்கை தமிழரசுக் கட்சியை ஆதரித்து நீங்கள் பட்ட கஷ்டம் கொஞ்சநஞ்சம் அல்ல.

எந்த அபிவிருத்தியும் நீங்கள் காணவில்லை. உரிமையையும் பெறவில்லை . மாறாக பசிபட்டினி பஞ்சம் அடக்குமுறை தான் மிச்சம்.

எனவே இம்முறை சங்கை ஆதரியுங்கள் பாரிய மாற்றம் ஏற்படும் .என்னை விரும்பினால் பத்துக்கு வாக்களியுங்கள் .இல்லாவிட்டால் வேறு இலக்கங்களுக்கு வாக்களியுங்கள் .நன்றி.

# சமூகத்தை ஏமாற்றும் முஸ்லிம் கட்சிகளை கிழக்கில் இருந்து துடைத்தெறிய வேண்டும்

## சிலிண்டர் வேட்பாளர் ஏ.எம். ஜெமீல்

**(செயிட் ஆஷிப்)**

தனித்துவ அரசியல் என்ற போர்வையில் சமூகத்தை ஏமாற்றும் முஸ்லிம் கட்சிகளை கிழக்கு மாகாணத்தில் இருந்து முற்றாகதுடைத் தெறிவதற்கான சந்தர்ப்பமாக நாடாளுமன்றத் தேர்தலைப் பயன்படுத்த வேண்டும் என்று கிழக்கு மாகாண சபையின் முன்னாள் குழுத் தலைவரும் திகாமடுல்ல மாவட்டத்தில் சிலிண்டர்சின்னம் 03 ஆம் இலக்கத்தில் போட்டியிடும் வேட்பாளருமான கலாநிதி ஏ.எம். ஜெமீல் வலியுறுத்தியுள்ளார்.

சாய்ந்தமருதில் செவ்வாய்கிழமை (29) இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் ;

இந்த நாட்டில் ஆட்சி மாற்றம் என்பதற் கப்பால் முறைமை மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற பாரிய எதிர்பார்ப்புடன் நாட்டு மக்களில் கணிசமான தொகையினர் அனுர குமார திசாநாயக்கவுக்கு வாக்களித்து அவரை ஜனாதிபதியாக்கியுள்ளனர்.



ஆனால் எதிர்பார்த்தளவுக்கு அரசாங்கத்தின் செயற்பாடுகள் அமையவில்லை. விலைவாசியை கட்டுப்படுத்த முடியாமல் இந்த அரசாங்கம் திணறுகிறது. அதனால் குறுகிய காலத்தில் அனுர அரசாங்கத்தின் மீது மக்கள் நம்பிக்கை இழந்து வருகின்றனர். ஜனாதிபதித் தேர்தலில் அனுர குமார திசாநாயக்க பெற்றுக் கொண்ட வாக்குகளை விட குறைவான ஆதரவையே இந்த நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் அவரது கட்சியால் பெற்றுக் கொள்ள முடியும். இதன்படி 100 ஆசனங்களுக்கு மேல் தேசிய மக்கள் சக்திக்கு கிடைக்க வாய்ப்பில்லை. ஆகையினால் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிடும் புதிய ஜனநாயக முன்னணியே நாடாளுமன்ற ஆட்சியை தீர்மானிக்கும் சக்தியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் போன்ற முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் வேட்பாளர்கள் மீதான அதிருப்தியும் வெறுப்பும் காரணமாகவே எமது இளையோர், அனுரவின் தேசிய மக்கள் சக்தியினால் ஈர்க்கப்படுகின்றனர். பொதுவாக சிறுபான்மையினர் குறிப்பாக முஸ்லிம்கள் ஒன்றை விளங்கிக் கொள்ள வேண்டும். அதாவது அனுரவும் தேசிய மக்கள் சக்தியும் வெறும் மாயை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். காலம் அதனை உணர்த்தும்.

தனித்துவ அரசியல் என்ற போர்வையில் காலா காலமாக சமூகத்தை ஏமாற்றி வருகின்ற முஸ்லிம் கட்சிகளை கிழக்கு மாகாணத்தில் இருந்து முற்றாக துடைத்தெறிவதற்கான சந்தர்ப்பமாக நாடாளுமன்றத் தேர்தலை எமது மக்கள் பயன்படுத்த வேண்டும். ஆனால் இந்த முஸ்லிம் கட்சிகளுக்கு மாற்றீடு தேசிய மக்கள் சக்தியல்ல என்பதை எமது இளையோர் புரிந்து கொள்ள வேண்டும்.

பொருளாதார முன்னேற்றம், ஊழல் ஒழிப்பு, தேசிய ஒற்றுமை, சிறுபான்மையினர் நலன் சார்நத விடயங்கள், பிராந்திய அபிவிருத்தி என்று எல்லாவற்றுக்குமான ஒரே தெரிவாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிடும் புதிய ஜனநாயக முன்னணி காணப்படுகிறது. அதில் போட்டியிடுகின்ற எம்போன்ற திறமைசாலிகளை ஆதரித்து நாடாளுமன்றம் அனுப்புவதன் மூலமே மக்கள் எதிர்பார்க்கும் மாற்றமும் முன்னேற்றமும் ஏற்படும்- என்றார்.

---

# நவராத்திரி கால சக்தி வழிபாட்டை முன்னிட்டு சமய அறிவுப்போட்டி பரிசளிப்பு விழா






**(வாஸ் கூஞ்ஞ)**

மன்னார் இந்து சமய வளர்ச்சிச் சங்கம் வருடாவருடம் மன்னார் மாவட்ட பாடசாலை மாணவர்களிடையே நவராத்திரி கால சக்தி வழிபாட்டை முன்னிட்டு சமய அறிவுப் போட்டிகளை நடாத்தி வருகின்றது.

அந்த வகையில் இந்த 2024 ஆம் ஆண்டு நடப்பு அறிவுப்போட்டிகளை நடாத்திய போது பண்ணிசை , பேச்சு , வினாவிடை மற்றும் எழுத்துப் பரீட்சைகளை நடாத்தியது.

இதற்கான பரிசளிப்பு விழாவும் இறை இசைக் கலைஞர் கௌரவிப்பும் 26.10.2024 அன்று சனிக்கிழமை மன்/சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது .இதில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்டச் செயலாளர் கனகசபாபதி கனகேஸ்வரன் கலந்து சிறப்பித்தார்.

சிறப்பு விருந்தினர்களாக நானாட்டான் பிரதேச செயலாளர் சிவசம்பு கனகாம்பிகை, மன்னார் நகர பிரதேச செயலாளர் ம.பிரதீப், திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச் சபைச் செயலாளர் சு.பிருந்தாவனநாதன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்

விழாவை சிவதர்சன சிவாச்சாரியார் குத்து விளக்கேற்றி ஆரம்பித்து வைத்ததுடன் மன்னார் இந்துமத பீட தலைவர் சிவஸ்ரீ.மகா தர்மகுமாரக் குருக்கள் ஆசியுரை வழங்கணீனார்.

பிரதம விருந்தினர்இ சிறப்பு விருந்தினர் வரவேற்கப்படுவதையும் குத்து விளக்கேற்றுவதையும் பிரதம விருந்தினருக்குச் சங்கச் செயலாளர் வி.செல்வக்குமரனால் பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப் படுவதையும் இறையிசைக் கலைஞர்கள் பா.கஜீவன் நாதஸ்வரத்துக்கான 'இளம் நாதஸ்வரக் கலைத் தென்றல்' பட்டத்தையும் வீ.யோகேஸ்வரன் 'இளம் தவில் கலைச் சொற்சுடர்' பட்டத்தையும் சங்கம் சார்பாக மன்னார் அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

---

### கல்முனை மாநகர சபைக்கு எதிராக மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

# நீர் இணைப்புக்காக தோண்டப்படும் வீதியினை செப்பனிடும் நிதிக்கு என்ன நடந்தது?

**( பாறுக் ஷிஹான்)**

கல்முனை மாநகர சபைக்கு எதிராக மனித உரிமை மீறல் வழக்கொன்றினை இலங்கை நீதிக்கான மய்யம் கல்முனை மேல் நீதிமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (29) தாக்கல் செய்துள்ளதாக நீதிக்கான மய்யத்தின் தலைவர் சட்டமுதுமானி ஷஂபி எச். இஸ்மாயில் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

கல்முனை மாநகர சபை பகுதியில் புதிய நீர் இணைப்புக்காக மாநகரசபையின் அனுமதி பெற்று தோண்டப்படுகின்ற கொங்கிரீட் வீதிகள் இன்னும் செப்பனிடப்படாததால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்குள்ளாகி வருகின்றமையை எமது மய்யம் சுட்டிக்காட்டி நடவடிக்கை எடுக்குமாறு கல்முனை மாநகர சபை ஆணையாளருக்கு கோரிக்கை கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்திருந்தது.




இதற்கு கல்முனை மாநகர சபை நிர்வாகத்தினரால் பொறுப்புணர்ச்சி யற்ற கண்துடைப்பான பதில் எமக்கு வழங்கப்பட்டது. இதனை எமது மய்யம் ஏற்றுக்கொள்ளாததால் இன்று மாநகர சபைக்கு எதிராக இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளோம்.

இவ்வழக்கிற்கு மய்யத்தின் பொதுச் செயலாளர் கலாநிதி றியாத் ஏ.மஜீத், பிரதித் தலைவர் யூ.கே.எம்.றின்சான் ஆகியோரும் ஆஜராகியிருந்தனர்.

புதிய நீர்மின் இணைப்பினை பெறும் விண்ணப்பதாரர்கள் கல்முனை மாநகர சபைக்கு ஏற்கனவே புதிய நீர் இணைப்புக்காக தோண்டப்படும் வீதியினை செப்பனிடுவதற்கான கட்டணத்தை செலுத்திய பின்னரே நீர் இணைப்புக்காக அனுமதியை பெற்றுக்கொள்கின்றனர். ஆனால் கல்முனை மாநகரசபை ஆள்புல எல்லைக்குள் நீர் இணைப்பு வேலைகள் முடிவடைந்த பின்னரும் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் தோண்டப்பட்ட வீதிகள் மாநகர சபையினால் செப்பனிடப்படாமல் நெடுங்காலமாக காணப்படுகின்றது.

இது மாநகர சபை கட்டளை சட்டத்தினை மீறும் ஒரு செயற்பாடாகும். மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 46 மற்றும் 47 ஆவது பிரிவின்படி, வீதிகளை நிர்மாணிப்பதும் பராமரிப்பதும் மாநகர சபையின் அடிப்படைப் பொறுப்பு களாகும். இந்த அடிப்படை கடமைகளை நிறைவேற்றத் தவறுவது, மாநகர சபையின் சேவைத் தன்மையை கடுமையான கேள்விக்குட்படுத்துகிறது.

ஒரு குறிப்பிட்ட சேவையினை வழங்கவென நிதி அறவிடப்பட்டு பின்னர் சேவையை வழங்காதிருப்பது ஒரு நிதி மோசடியாகும். மக்களிடம் அறவிடப்பட்ட நிதிக்கு என்ன நடந்துள்ளது? என சந்தேகம் எழுகின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நீதிக்கான மய்யம் மாநகர சபை ஆணையாளருக்கு அனுப்பி வைத்த கடிதத்தில் தோண்டப்பட்ட வீதிகளை செப்பனிடும் பணியை ஆரம்பிக்குமாறு வேண்டுகோள் விடுத்ததோடு, மாநகர சபை நடவடிக்கை எடுக்காது போனால் மாநகர சபைக்கு எதிராக ஒரு சட்ட நடவடிக்கை எடுப்போம் என்று அன்றே தெரிவித்திருந்தோம்.

அரசு நிறுவனம் ஒன்றுக்கு மாகாண மேல் நீதிமன்றத்தில் மனித உரிமை மீறல் வழக்கு தாக்கல் செய்யப் பட்டுள்ளதானது இதுவே வரலாற்றில் முதற்தடவையாகும்

# தம்பலகாமம் பிரதேச சாஹித்திய விழா









**(ஹஸ்பர் ஏ.எச்)**

திருகோணமலை ,தம்பலகாமம் பிரதேச சாகித்தியா விழா நிகழ்வு தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத்தில் (30)இடம் பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் இடம் பெற்ற குறித்த நிகழ்வில் பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சுதாகரன் கலந்து சிறப்பித்தார்.

இதன் போது தம்பலகாமம் பிரதேச செயலகத்துக்குட்பட்ட கலை கலாசாரம் பாரம்பரியத்தை எடுத்து காட்டி கடந்த காலங்களில் பணியாற்றிய சிரேஷ்ட கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டார்கள். பாடசாலை மாணவ மாணவிகளின் கலை கலாசார நிகழ்வுகளும் மேடையேற்றப்பட்டதைடன் பரிசில்கள் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இதில் தம்பலகாமம் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், கணக்காளர் எஸ்.செல்வதாஸ், சமுர்த்தி தலைமை முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சித்திக் உட்பட பாடசாலை ஆசிரியர்கள் மாணவ மாணவிகள் பெற்றார்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# கிழக்கு மாகாணத்தில் முதலிடம் பெற்ற சாதுரிய காக்கையார் நாடகத்தில் நடித்த பற்றிமா மாணவர்களுக்கு பாராட்டு விழா!

**( வி.ரி.சகாதேவராஜா)**

கிழக்கு மாகாணத்தில் முதலிடம் பெற்ற சாதுரிய காக்கையார் என்ற நாடகத்தில் நடித்த கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரி மாணவர்கள் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்கள்.

கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரி ஆசிரியர் சிவகுரு நந்தகுமாரினால் தயாரிக்கப்பட்ட சாதுரிய காக்கையார் என்ற தலைப்பிலான நாடகமானது மாகாணத்தில் முதலிடம் பெற்றது.

இந் நாடகம் அண்மையில் கொழும்பில் மருதானை ரவர் மண்டபத்தில் நடைபெற்ற தேசிய ரீதியிலான இறுதிப் போட்டியில் கலந்து கொண்டது.



அப் போட்டியில் கலந்து கொண்டு போட்டியிட்ட 40 நாடகங்களில் முதல் 10 நாடகங்கள் தெரிவு செய்யப்பட்டன. அந்த பத்து நாடகங்களுள் ஒன்றாக கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி நாடகமும் தெரிவானது.

கிழக்கு மாகாணத்தில் முதலிடத்தை பெற்றுக் கொண்ட இந் நாடகத்தில் பங்குபற்றிய மாணவர்களைக் கௌரவித்து சான்றிதழ்கள் நினைவுச் சின்னங்களை வழங்கும் விழா நேற்று முன்தினம் (29) செவ்வாய்க்கிழமை கல்லூரியில் நடைபெற்றது.

கல்லூரி அதிபர் அருட் சகோதரர் எஸ்.இ.றெஜினோல்ட் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவ.ஜெகராஜன் கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதிகளாக கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே. அதிசயராஜ், அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரி.எம்.றின்சான், கல்முனை பிரதேச கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி தயாளினி விக்னகுருபரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நாடகத் தயாரிப்பு ஆசிரியர் மற்றும் நடித்த ஆசிரியர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

# திருமலை மாவட்ட செயலகத்தில் அஞ்சல் மூல வாக்கு பதிவு





**(ஹஸ்பர் ஏ.எச்)**

2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலுக்கான அஞ்சல் மூல வாக்களிப்பு (30) திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி அவர்களின் தலைமையில் மாவட்ட செயலகத்தில் 8.30 மணியளவில் ஆரம்பமானது.

2024 ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலுக்கான அஞ்சல் மூல வாக்களிப்பானது இன்றைய தினத்தை தொடர்ந்து ஏனைய அரச அலுவலகங்களில் நவம்பர் மாதம் (1) மற்றும் (04) ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

மேலும் அன்றைய தினங்களில் வாக்களிப்பை தவறவிட்டவர்களுக்கான மீள் வாக்களிப்பானது நவம்பர் மாதம் 07 மற்றும் 08 ஆம் திகதிகளில் நடைபெறும்.

## பொலிஸாரின் பொதுமக்களுக்கான முக்கிய அறிவித்தல்

**(பாறுக் ஷிஹான்)**

அம்பாறை மாவட்டத்தின் அண்மைக்காலமாக பல்வேறு சட்டவிரோத செயற்பாடுகள் அதிகரித்துள்ளதாக பொதுமக்களுக்கு முக்கிய அறிவுறுத்தல்கள் பொலிஸாரினால் வழங்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் நிந்தவூர், அக்கரைப்பற்று, சம்மாந்துறை, கல்முனை, சவளக்கடை, காரைதீவு, சாய்ந்தமருது, பெரிய நீலாவணை, உள்ளிட்ட பொலிஸ் நிலையங்களுக்குட்பட்ட பகுதிகளிலும் கடந்த சில நாட்களாக வீரமுனை ,மருதமுனை, மண்டூர் , பகுதிகளிலும் அதிகளவான வீடு உடைத்து நகை ,பணம் திருடுதல் மற்றும் மோட்டார் சைக்கிள் காணாமல் சென்ற சம்பவங்கள் அதிகரித்த வண்ணம் உள்ளன.

குறித்த சட்டவிரோத சம்பவங்களில் வீடுகள் உடைத்து திருடும் சம்பவம் இரவு 1:00 மணிக்கும் அதிகாலை 4:30 மணிக்கும் இடையில் இடம்பெற்று வருவதுடன் வீட்டின் ஜன்னல் கிறில் மற்றும் ஒடுகள் பிரிக்கப்பட்டு வீட்டு உரிமையாளர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் போது இடம் பெறுவதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இது தவிர மோட்டார் சைக்கிள் திருட்டுக்கள் சம காலங்களில் பல்வேறு பொலிஸ் நிலைய பகுதிகளிலும் அதிகரித்துள்ளன. பெரும்பாலும் பொது இடங்களில் தரித்து



வைக்கப்பட்ட நிலையிலும் வயல் வேலை காரணமாக வீதி ஓரங்களில் நிறுத்தப்பட்டுள்ள நிலையில் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கர வண்டியில் வைத்து விட்டு செல்லும் பொருட்கள் உள்ளிட்டவைகள் திருடப்பட்டு வருகின்றன.

மேலும் சில பொலிஸ் பிரிவுகளில் வைத்தியசாலை, பொதுச்சந்தை, நகரப் பகுதிகளிலும் மோட்டார் சைக்கிள் களவாடப்பட்டுள்ளமை சிசிடிவி காணொளிகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

எனவே இரவு நேரத்தில் வீட்டின் மறைவான இடங்களை பரீட்சித்து பெறுமதியான பொருட்களை பொதுமக்கள் பாதுகாப்பதுடன் , வீட்டின் ஜன்னலுக்காக பொருத்தப்படும் கிறிலை உறுதியான வகையில் பொருத்தி கொள்ளுமாறும் , சீலிங் பேன் பயன்படுத்தும் வீடுகளில் அதிக திருட்டுகள் இடம்பெறுவதனால் அதிக சத்தம் இடும் இவ்வாறான மின் விசிறிகளை பயன்படுத்துவதை தவிர்க்குமாறு பொதுமக்களை பொலிஸார் கேட்டுள்ளனர்.

அத்துடன் பகல் நேரத்திலோ, இரவு நேரத்திலோ தேவையற்ற முறையில் சந்தேகத்திற்கிடமாக மாஸ்க் மற்றும் தொப்பி அல்லது தலைக்கவசம் அணிந்து நடமாடுபவர்கள் தொடர்பாக அவதானமாக இருக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே சட்டவிரோத செயற்பாடுகள் சம்பந்தமாக அவதானமாக இருப்பதுடன் சந்தேக நபர்கள் தொடர்பாக தகவல் ஏதேனும் தெரிந்தால் அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு தெரியப்படுத்தமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

# நாடாளுமன்ற தேர்தலில் தமிழர் பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்படுமா??





**(ஹஸ்பர் ஏ ஹலீம்)**

ஜனாபதி தேர்தல் முடிந்த கையோடு இலங்கையின் 17 ஆவது பாராளுமன்ற தேர்தல் 14.11.2024 ந் திகதி அன்று இடம் பெறவுள்ளது . வடகிழக்கில் பல சிறுபான்மை கட்சிகள், சுயேட்சை குழுக்கள் என போட்டியிடுகின்றனர் . கிழக்கு மாகாணத்தில் இம் முறை அதிகமான வேட்பாளர்கள் களமிறக்கப்பட்ட நிலையில் தமிழ் மக்களுக்கான பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்படுமா? என கேள்வி எழுப்பப்படுகிறது இதனை சில தமிழ் வேட்பாளர்கள் தங்களது தேர்தல் பரப்புரையின் போது இது குறித்து விழிப்புணர்வுகளை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி வருகின்றனர்.

இலங்கையில் 22 தேர்தல் மாவட்டங்கள் காணப்படுகின்றன. பாராளுமன்றத்திற்காக மொத்தமாக 225 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள் இதில் நேரடியாக 196 உறுப்பினர்களும் தேசியப் பட்டியல் ஊடாக 29 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படுவார்கள் .இருந்த போதிலும் சிறுபான்மை சமூகங்களில் வாக்களிப்பு வீதம் குறைவாக காணப்படுவதாக தெரியவருகிறது இதனால் யாழ்ப்பாணத்தில் ஏழு ஆசனங்கள் இருந்த நிலையில் இம் முறை ஒரு ஆசனம் குறைக்கப்பட்டு ஆறு ஆசனங்களாக மாறியுள்ளது இது போன்று கொழும்பு மாவட்டத்தில் 19 ஆசனங்களில் ஒரு ஆசனம் குறைக்கப்பட்டு 18 ஆக மாறியுள்ளதுடன் கம்பஹா, களுத்துறை மாவட்டங்களுக்கான குறித்த மேலும் ஒவ்வொரு ஆசனமும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது இதற்கான காரணங்களாக வாக்காளர் பதிவு தொகையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளமை ,சர்வதேச புலம்பெயர்வு, வாக்களிக்காமை போன்ற பல காரணங்கள் குறித்த ஆசன பங்கீடு குறைவுக்கான காரணங்களாக கண்டறியப்பட்டுள்ளது.

இதனால் வட கிழக்கில் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் இல்லாமல் போக கூடிய சாத்தியம் நிலவி வருகிறது தமிழ் கட்சிகளில் இலங்கை தமிழ் அரசு கட்சி , தமிழ் தேசிய மக்கள் முண்ணனி உட்பட பல கட்சிகள் போட்டியிடுகின்றன இது போன்று ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு, தேசிய மக்கள் சக்தி, புதிய ஜனநாயக முண்ணனி உட்பட பல பிரதான கட்சிகள் தவிர்ந்த பல சுயேட்சை குழுக்களும் தமிழர் பகுதிகளில் போட்டியிடுவதனால் வாக்குகள் சிதறிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. திருகோணமலை மாவட்டத்தில் மொத்தமாக 315925 வாக்காளர்கள் உள்ளனர் இதில் 131811 முஸ்லிம் வாக்காளர்களும், 97867 தமிழ் வாக்காளர்களும், 84263 சிங்கள வாக்காளர்களும் , 1163 ஏனைய வாக்காளர்களும் காணப்கும் நிலையில் நான்கு பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்காக 17 கட்சிகளும் 14 சுயேட்சை குழுக்கள் என 217 அபேட்சகர்கள் இம் முறை 2024ம் ஆண்டில் இடம் பெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

தற்பொது தேர்தல் கள நிலவரம் சூடு பிடித்துள்ள நிலையில் வாக்காளர்களின் வீடுகளுக்கு வேட்பாளர்கள் வீடு வீடாக சென்று தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுகிறார்கள் பல வாக்குறுதிகளை மக்கள் மத்தியில் அள்ளி வீசுகிறார்கள் இருந்த போதிலும் ஒரு ஜனநாயக ரீதியான அமைதியான தேர்தலை மக்கள் எதிர்பார்க்கின்றனர். தேசிய மக்கள் சக்தியின் வாக்கு வங்கிகளை பெரும்பான்மையாக 113 ஆசனங்களை பெறுவேன் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தேர்தல் மேடைகளில் கூறி வருகின்றார். ஆனால் திருகோணமலை , மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் மக்கள் மத்தியில் கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது தேசிய மக்கள் சக்திக்கு குறைவான வாக்குகளே கிடைக்கப் பெற்றன . தமிழ் பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்பட வேண்டுமாக இருந்தால் தமிழ் மக்கள் தங்களது உரிமைகளையும் அபிவிருத்திகளையும் இணைந்து கொண்டு செல்லக் கூடிய வேட்பாளர்களுக்கு ஆதரவு வழங்கி பிரதிநிதித்துவத்தை தக்க வைக்கலாம் இது ஒற்றுமையாக செயற்படுவதன் மூலமே பாதுகாக்க முடியும் .

தமிழ் நாட்டில் திருகோணமலையை சேர்ந்த 2000 குடும்பங்கள் வாழ்ந்து வருவதாகவும் இது போன்று கனடாவில் 500 குடும்பங்கள் வாழ்ந்து வருவதாகவும் தெரியவருகிறது ஆரம்பத்தில் காணப்பட்ட தமிழ் மக்களின் வாக்கு வீதம் தற்போது பன்மடங்கு குறைந்து காணப்படுகிறது எனவே தான் 80 சதவீதமான வாக்குகளை தமிழ் மக்கள் இந்த தேர்தலில் ஆர்வத்துடன் வாக்களித்து தங்களுக்கான மக்கள் பிரதிநிதித்துவத்தை தெரிவு செய்து பாதுகாத்துக் கொள்ள முடியும் .

திருகோணமலை மாவட்டத்தை பொறுத்த மட்டில் பல மக்களுடைய பிரச்சினைகளாக நில அபகரிப்பு, உரிமை சார் பிரச்சினை என காணப்பகுகிறது அப்பாவி பொது மக்களின் விவசாய காணிகளை அரச திணைக்களங்கள், பௌத்த விகாரைக்கு என பல காணிகளை அபகரிப்பு செய்துள்ளனர் இதனை மீட்க கட்டாயமாக தமிழ் பிரதிநிதித்துவம் தேவை இந்த பிரதிநிதித்துவம் இழக்கப்பட்டால் மக்களது உரிமைகள் பரிபோகக் கூடிய வாய்ப்பு உள்ளது . காலம் காலமாக எந்தொரு அரசாங்கம் மாறி மாறி நாட்டை ஆட்சி செய்தாலும் சிறுபான்மை மக்களுக்கான தீர்வு கேள்விக்குறியாகவே உள்ளது இதனை தமிழ் பேசும் சமூகம் உணர்ந்து சரியான பிரதிநிதித்துவத்தை பாதுகாக்க வாக்கு உரிமையினை பயன்படுத்த வேண்டும்.

ரணில் விக்ரமசிங்க, மஹிந்த ராஜபக்ச, கோத்தபாய ராஜபக்ச, ரணில் மைத்திரி தேசிய அரசாங்கம் மற்றும் அநுர அரசாங்கம் வரை நல்லிணக்கம் பொறுப்புக் கூறலை ஏற்றுள்ளனர் ஆனாலும் தேசிய இனப் பிரச்சினையின் ஒரு தரப்பாகிய ஈழத்தமிழர்களின் எண்ணங்களை கடந்த கால இலங்கை அரஙாங்கங்கள் உள்வாங்கியிருக்கவில்லை இதனை இம் முறை வடகிழக்கு மக்கள் நாடாளுமன்ற தேர்தலில் தங்கள் கட்சி சார்பானவர்களுக்கான சிறுபான்மை என்ற எண்ணத்துக்கு அமைய பலத்தை நிரூபித்து ஆசனங்களை கைப்பற்ற வேண்டும் அப்போது தான் பலம் பொருந்திய சக்தியாக சிறுபான்மை தமிழ் கட்சிகள் இருக்கலாம் இல்லாது போனால் நமக்குள் பல பிளவுகள் ஏற்பட்டு வாக்குகள் சிதறிக்கப்படலாம் .இம் முறை அதிக வேட்பாளர்கள் சுயேட்சை குழு களமிறக்கப்பட்டுள்ளதால் இது உள்ளூயாட்சி மன்ற தேர்தலா நாடாளுமன்ற தேர்தலா என்ற சந்தேகம் எழுகின்றது இதனால் ஜனநாயக உரிமைகளுடன் தங்கள் பிரதிநிதிகளை தமிழர் தேசத்தில் பாதுகாக்க அனைத்து கட்சிகளும் ஒன்றுபட்டு ஒற்றுமையாக பயணித்தால் திருகோணமலை மாவட்டத்தில் இரு தமிழ் பிரதிநிதிகளை பெறலாம் இதற்காக ஒற்றுமையுடன் பயணிப்பதே சாலச் சிறந்தது.



## சௌமிய மூர்த்தி தொண்டமானின் 25 ஆவது சிரார்த்த தினம்







**தலவாக்கலை பி.கேதீஸ்**

மலையகத்தின் மூத்த அரசியல் தலைவரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஸ்தாபகருமான அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமானின் 25 ஆவது சிரார்த்த தினம் (30.10.2024) இன்று அனுஷ்டிக்கப்பட்டது.

பழைய பாராளுமன்ற கட்டட வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரின் உருவச்சிலைக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான், தலைவர் செந்தில் தொண்டமான், தேசிய அமைப்பாளர் பழனி சக்திவேல் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள் உள்ளிட்டோர் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். அதனை தொடர்ந்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைமையகமான சௌமியபவனில் பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.

# மன்னார் காற்றாலையை அமைக்கும் அதானியின் திட்டம் கைவிடப்படுமா?

## புதுடில்லி செல்லும் அரச உயர்மட்ட குழு

இந்தியாவின் அதானி நிறுவனத்துடன் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் மன்னாரில் காற்றாலை மின்னுற்பத்தி நிலையத்தை நிர்மாணிக்கும் பணி தொடர்பில கலந்துரையாடல்களை நடத்த எதிர்வரும் ஜனவரி மாதம் இலங்கை அரசாங்கத்தின் உயர்மட்ட குழுவொன்று புதுடில்லி செல்ல உள்ளது.

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் மன்னாரில் காற்றாலை மின்னுற்பத்தி நிலையமொன்றை அமைப்பதற்கான இணக்கப்பாடுகள் எட்டப்பட்டு ஆரம்பகட்ட பணிகளும் முன்னெடுக்கப்பட்டன. இத்திட்டத்தின் ஊடாக 250 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு இணக்கப்பாடுகள் எட்டப்பட்டிருந்தன.

என்றாலும், இத்திட்டத்துக்கு கடுமையான எதிர்ப்புகள் வெளியாகியிருந்ததுடன், தற்போதைய அரசாங்கமும் இத்திட்டத்தை மீள் பரிசீலனை செய்ய உள்ளதாக அறிவித்துள்ளது.

கடந்த 10ஆம் திகதி இதுதொடர்பிலான அரசாங்கத்தின் நிலைப்பாட்டை சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்திற்கு அறிவித்தும் இருந்தார்.

காற்றாலை மின்னுற்பத்தி திட்டத்திற்கு கடந்த அமைச்சரவை வழங்கிய அனுமதியை வலுவற்றதாக்கும் உத்தரவை பிறப்பிக்குமாறு கோரி வனஜீவராசிகள், இயற்கை வளங்கள் பாதுகாப்பு சங்கம், சுற்றுச்சூழல் நீதிக்கான மையம் உள்ளிட்ட சில தரப்பினரால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே சட்டமா அதிபர் திட்டத்தை மறுசீரமைக்கும் அரசாங்கத்தின் தீர்மானத்தை உயர்நீதிமன்றத்துக்குத் தெரியப்படுத்தியிருந்தார்.

இலங்கை அரசாங்கம் மற்றும் இந்தியாவின் அதானி நிறுவனத்திற்கு இடையே காற்றாலை மின்னுற்பத்தி திட்டம் குறித்து ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ள உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் பொதுத் தேர்தலுக்கு முன்னர் அரசாங்கம் கலந்துரையாடலை நடத்த உள்ளது. பொதுத் தேர்தலின் பின்னர் நியமிக்கப்படவுள்ள புதிய அமைச்சரவையில் திட்டம் குறித்து இறுதி முடிவு எடுக்கப்பட உள்ளது. இந்த நிலையில், காற்றாலை மின்னுற்பத்தி திட்டம் தொடர்பில் கலந்துரையாடல்களை நடத்த இலங்கை அரசாங்கத்துக்கு புதுடில்லியில் இருந்து அழைப்பு கிடைக்கப்பெற்றுள்ளது. அதன் பிரகாரம் எதிர்வரும் ஜனவரி மாதம் இலங்கை அரசாங்கத்தின் உயர்மட்ட குழுவொன்று புதுடில்லி செல்ல உள்ளதாக அரச தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

# ஒற்றை ஆட்சி அரசியலமைப்புக்கு ஆதரவளிக்கின்ற வரலாற்றுத் தவறினை இழைத்துவிடக்கூடாது

( வாஸ் கூஞ்ஞ)

ஒற்றை ஆட்சி அரசியலமைப்புக்கு ஆதரவளிக்கின்ற வரலாற்றுத் தவறினை தமிழ் மக்கள் இழைத்துவிடக் கூடாது. அதற்கு எதிராகப் போராடக் கூடிய கட்சியாகிய தமிழ்த் தேசிய முன்னணிக்கு வாக்களித்து அக்கட்சியைப் பலப்படுத்த வேண்டுமென தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

மன்னார் நகரசபை கலாச்சார மண்டபத்தில் மாலை 3.30 மணியளவில் இடம் பெற்ற பிரச்சாரக் கூட்டத்திற் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்இ



இலங்கையின் புதிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்காஇ தமிழ் மக்களுடைய இனப் பிரச்சினையை தீர்ப்பதற்காகத் தாங்கள் ஒரு புதிய அரசியலமைப்பை கொண்டு வர இருப்பதாகச் சர்வதேச மட்டத்திற்குக் கூறியுள்ளார்.

அந்த அரசியலமைப்பு 2015 ஆம் ஆண்டு. மைத்திரிபால சிறிசேன ரனில் விக்ரமசிங்க அவர்களுடைய காலப்பகுதியிலே. நல்லாட்சி அரசாங்கம் முன்னெடுத்த ஒரு புதிய அரசியலமைப்புக்கான முயற்சி.

அந்த காலகட்டத்திலே அந்த முயற்சிலே ஒரு இடைக்கால அறிக்கை வெளியிடப்பட்டு ஸ்தம்பிக்கபட்டது காரணம் அப்போதிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதமர் ரனில் விக்கிரமசிங்காவை பதவி நீக்கம் செய்து மஹிந்த ராஜபக்சவை பிரதமர் ஆக்கினார்.

அந்த பிரச்சனை உச்ச நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லப்பட்டு உச்ச நீதிமன்றம் ரணில் விக்ரகமசிங்காவின் பதவிநீக்கம் பிழை என்று தீர்ப்பளித்து மீண்டும் அவர் பிரதமர் ஆனார். ஆனால் அந்த குழப்பம் நடைபெற்றதற்குப் பிற்பாடு அந்த புதிய அரசியலமைப்பிற்கான முயற்சியை முடிவுக்கு கொண்டுவர முடியவில்லை.

ஆகவே இன்று ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டிருக்கிற அனுர குமார திசாநாயக்கா மிகத் தெளிவாக எந்தவிதமான சந்தேகத்திற்கும் இடம் அளிக்காமல் அந்த 2015 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட அந்த முயற்சியைத் தான் முடிவுக்கு கொண்டு வர இருப்பதாகக் கூறியுள்ளார்.

இதிலே நாங்கள் தெளிவாக பார்க்கக் கூடியது. அந்த இடைக்கால அறிக்கை தமிழ் மக்களுக்கு. ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு அரசியலமைப்பு அறிமுகப்படுத்துகிறதா இல்லையா என்று.

அந்த இடைக்கால அறிக்கையை நீங்கள் எடுத்துப் பார்த்தால் அறிக்கையினுடைய முன்னுரையாகஇ அன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றத்தில் பாராளுமன்றத்தை ஒரு அரசியல் நிர்ணய சபையாகப் பிரகடனப்படுத்தப்பட்ட போது அதிலே செய்த முதலாவது உரையைத்தான் அதனுடன் அவர்கள் இணைத்து இருக்கிறார்கள்.



காரணம் அதுதான் அந்த முயற்சியினுடைய நோக்கத்தை குறிக்கின்ற. ஒரு பேச்சு. அந்தச் சட்டத்தினுடைய இலக்கு என்ன என்பதைத் தெளிவுபடுத்துவதற்கு ஒரு அறிமுகம் என்பது இருக்கும்.

அந்த வகையிலே இந்த புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கான ஒரு முயற்சியிலே மைத்திரிபால சிறிசேனவுடைய பேச்சை தான். முன்னுரையாக அவர்கள் அதிலே இணைத்தார்கள்.

அந்த முன்னுரையில் மைத்திரிபால சிறிசேன தெளிவாகக் கூறுகின்றார் இலங்கை ஒரு ஒற்றை ஆட்சி நாடு. இலங்கையினுடைய இன்றைய அரசியல் அமைப்பு மாத்திரம் அல்ல. கடந்த மூன்று அரசியலமைப்புகளும் ஒற்றை ஆட்சி அரசியல் அமைப்பாக தான் இருந்துள்ளதென்று. இன்று அந்த ஒற்றையாட்சி முறைமையைத்தான் புதிய ஜனாதிபதி நிறைவேற்ற இருக்கின்றார்.

அதுதான் தமிழ் மக்களுக்கு இருக்கக்கூடிய மிகப்பெரிய சவால்இ அதை எதிர்ப்பதாக இருந்தால் அதை செய்யக்கூடியஇ செய்ய தயாராக இருக்கின்ற ஒரே ஒரு அணி சைக்கிள் சின்னத்தில் போட்டியிடுகிற தமிழ் தேசிய மக்கள் முன்னணி மட்டுமேஅவ்வாறு நிகழ வேண்டும் என்றால் வடகிழக்கிலே சைக்கிள் சின்னம் குறைந்தது 10 ஆசனங்களை பெற வேண்டும். 18 ஆசனங்களில் 10 என்றால் மட்டுமே பெரும்பான்மை. அதற்காக வன்னி தேர்தல் மாவட்டத்தில் குறைந்தது இரண்டு ஆசனங்களைச் சைக்கிள் கட்சி பெற வேண்டும்.

வன்னித் தேர்தல் தொகுதியிலே இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களை நாங்கள் தெரிவு செய்தே ஆக வேண்டும். வன்னியிலே தெரிவு செய்யப்படும் ஆறு பாராளுமன்ற உறுப்பினர்களில் நாலு பேர் தமிழ் பாராளுமன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்படுவார்கள்.

அந்த நான்கு பேரில் இரண்டு பேர் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பிரதிநிதிகளாக இருந்தால் மட்டுமே. ஒற்றை ஆட்சியை எதிர்க்கக் கூடிய பலத்தோடு நம்முடைய அணி பாராளுமன்றத்திற்கு செல்லும். அது ஒரு சாதாரண விடயம் அல்ல. நாங்கள் வெறுமனே தேர்தலில் போட்டியிட்டு எத்தனையோ ஆசனங்களை வென்று இருக்கிறோம் என்று புகழ் பாடுகின்ற ஒரு அமைப்பு அல்ல. எங்களுக்கு என்று ஒரு இலக்கு இருக்கிறது. அந்த இலக்கை நோக்கி பயணிக்கிற ஒரு அமைப்பாக தான் நாங்கள் செயற்பட்டு வருகிறோம்.

அந்த இரண்டு ஆசனங்களை உறுதிப்படுத்துவதாக இருந்தால் மன்னார் மாவட்டம்இ தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கு அந்த பாராளுமன்ற உறுப்பினரைத் தெரிவு செய்தே ஆக வேண்டும். இதுவரைக்கும் இந்த மண்ணிலே சாதிக்காத ஒரு விடயத்தை தமிழ் இனத்துக்காக நாம் சாதித்தே ஆகவேண்டுமென்று அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த கூட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராசா. கஜேந்திரன்இ தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மன்னார் மாவட்ட அமைப்பாளர் ஜோன்சன் ஆசிரியர்இ தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மன்னார் மாவட்டச் செயளாளர் விக்ரர் தற்குரூஸ்இ மற்றும் அக்கட்சியின் மன்னார் வேட்பாளர் சோமநாதன் பிரசாத் உட்பட அனைத்து வேட்பாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

